ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2143/17 - 2019 ඔක්තෝබර් මස 02 වැනි බදාදා - 2019.10.02

*2143/17 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 02 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

***1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம்***

*14 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14(2) ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்ரம ஆகிய நான், நிதி அமைச்சரின் இணக்கப்பாட்டுடன், இக்கட்டளை மூலம் 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 05 ஆந் திகதிய 2113/4 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் திருத்தியமைக்கப்பட்ட, 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 27 ஆந் திகதிய 2047/2 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் 2 ஆம் பந்தியில்* (xiv) *ஆம் உப பந்திக்கு உடனடுத்து பின்வரும் உப பந்திகளை உட்புகுத்துவதன் மூலம் குறித்த கட்டளை திருத்தியமைக்கப்படுகிறது என இத்தால் பிரகடனப்படுத்துகிறேன்.*

"(xv) *2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாத்துறைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் பதிவுசெய்துள்ளதும் மற்றும் 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, முதலீட்டுச் சபைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கை செய்து கொண்டுள்ளதும் சுற்றுலாத்துறையில் ஈடுபட்டுள்ளதுமான ஏதேனுமொரு தொழில் முயற்சியொன்றினால் இறக்குமதி செய்யப்பட்ட இ. மு. தலைப்பு 94.03 இன்கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள ஏதேனுமொரு வீட்டுத் தளபாடமொன்று,*

(xvi) *2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 06 ஆம் அல்லது அதற்குப் பின்னரான கருத்திட்டமொன்று ஐ. அ. டொ. 50 மில்லியன் அல்லது அதற்கு மேற்பட்ட முதலீட்டுடான தொழில் முயற்சி ஒன்றினால் குறித்த கருத்திட்டம் செயற்படுத்தப்படும் வரையில் வரையில் அல்லது குறித்த கருத்திட்டம் நிருமாணிக்கப்படுகின்ற காலப்பகுதியில் ஆனால் அதன் வர்த்தக செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு முன்னர், இறக்குமதி செய்யப்படுகின்ற ஏதேனும் பண்டமொன்று*"

1A - PG 4672 — 567 (2019/10)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(xvii) காலநிலையினைக் கட்டுப்படுத்தி, களஞ்சியசாலை வசதி/ சீதோசனத்துடன் கூடிய தொடர் விநியோகத்திற்கான உட்கட்டமைப்பு வசதியினைத் தாபிப்பதற்கான கருத்திட்டம் ஒன்றில் முதலீடு செய்கின்ற ஏதேனும் தொழில் முயற்சியொன்றினால், குறித்த கருத்திட்டத்தின் வர்த்தக செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் குறித்த கருத்திட்டம் செயற்படுத்தப்படுகின்ற அல்லது கட்டுமான காலப்பகுதியில் இறக்குமதி செய்யப்படுகின்ற, உணவு ஆணையாளர் திணைக்களம் என்ற விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரின் விதிப்புரையின் பேரில் நிதி அமைச்சின் செயலாளரினால் பொருட் பட்டியலினைத் அங்கீகரித்ததன் பேரில் இயைபுறுமுறை பொருள் வகைப்படுத்தல் குறியீட்டின் கீழ் (8 இலக்கங்களைக் கொண்ட தேசிய உப தலைப்பு) வகைப்படுத்தப்பட்ட ஏதேனும் பண்டமொன்று.

இந்தப் பந்திக்கான ஏற்பாடுகள் இக்கட்டளை வெளியிடப்பட்ட திகதியிலிருந்து 3 வருடங்களுக்குப் பயன்வலுப்பெறுதல் வேண்டும்.

இக்கட்டளையானது 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 03 ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறுதல் வேண்டும்.

மலிக் சமரவிக்ரம,
அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு,
கொழும்பு 01,
2019, ஒற்றோபர் 02.

10-633